# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - நவீன யுகத்தின் தொடக்கம் முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

23 x 1 = 23

1) கீழ்க்கண்டவர்களில் யார் மனித நேயத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்?

(அ) லியானார்டோ டாவின்சி **(ஆ) பெட்ரார்க்** (இ) ஏராஸ்மஸ் (ஈ) தாமஸ் மூர்

2) 'ஸ்கூல் ஆ..ப் ஏதென்ஸ்' என்ற ஓவியத்தை வரைந்தவர்.

**(அ) ர..பேல்** (ஆ) மைக்கேல் ஆஞ்சலோ (இ) அல்புருட் டியுரர் (ஈ) லியானார்டோ டாவின்சி

3) வில்லியம் ஹார்வி _____ கண்டுபிடித்தார்.

(அ) சூரியனே பிரபஞ்சத்தின் மையம் (ஆ) பூமியே பிரபஞ்சத்தின் மையம் (இ) புவியீர்ப்பு விசை **(ஈ) இரத்தத்தின் சுழற்சி**

4) "தொண்ணூற்றைந்து கொள்கைகள்" களை எழுதியவர் யார்?

**(அ) மார்ட்டின் லூதர்** (ஆ) ஸ்விங்லி (இ) ஜான் கால்வின் (ஈ) தாமஸ்மூர்

5) 'கிறிஸ்துவ மதத்தின் நிறுவனங்கள்' என்ற நூலை எழுதியவர்_______.

(அ) மார்ட்டின் லூதர் (ஆ) ஸ்விங்லி **(இ) ஜான் கால்வின்** (ஈ) செர்வாண்டிஸ்

6) பூமத்திய ரேகையை கடந்த முதல் மாலுமி யார்?

(அ) மாலுமி ஹென்றி **(ஆ) லோபோ கோன்ஸால்வ்ஸ்** (இ) பார்த்தலோமியோ டயஸ் (ஈ) கொலம்பஸ்

7) பசிபிக் பெருங்கடல் எனப் பெயரிட்டவர்_______.

(அ) கொலம்பஸ் (ஆ) அமெரிகோ வெஸ்புகி **(இ) ..பெர்டினான்ட் மெகெல்லன்** (ஈ) வாஸ்கோடகாமா

8) அமெரிக்க கண்டம்________என்பவரின் பெயரால் பெயரிடப்பட்டுள்ளது.

**(அ) அமெரிகோ வெஸ்புகி** (ஆ) கொலம்பஸ் (இ) வாஸ்கோடகாமா (ஈ) ஹெர்நாண்டோ கார்டஸ்

9) கிழக்கு இந்தியாவில் போர்ச்சுகீசியர்களின் வசமிருந்த பகுதிகளுக்குத் தலைமையகமாக _____ இருந்தது.

(அ) மணிலா (ஆ) பம்பாய் (இ) பாண்டிச்சேரி **(ஈ) கோவா**

10) கீழ்கண்ட தாவரங்களுள் எது அமெரிக்காவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது?

(அ) கரும்பு **(ஆ) சர்க்கரைவள்ளிக்கிழங்கு** (இ) அரிசி (ஈ) கோதுமை

11) ஜெர்மனியில் அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர்

**(அ) கூட்டென்பர்க்** (ஆ) கலிலியோ (இ) கோபர்நிகஸ் (ஈ) வில்லியம் ஹார்வி

12) பைசாண்டிப் பேரரசின் தலைநகரம்

(அ) டமாஸ்கஸ் (ஆ) இஸ்தான்புல் (இ) துருக்கி **(ஈ) கான்ஸ்டான்டிநோபிள்**

13) தாந்தே எழுதிய நூல்

(அ) மடமையின் புகழ்ச்சி (ஆ) இளவரசன் **(இ) டிவைன் காமெடி** (ஈ) உட்டோபியா

14) "மடமையின் புகழ்ச்சி' என்ற நூலை எழுதியவர்.

**(அ) எராஸ்மஸ்** (ஆ) சர் தாமஸ் மூர் (இ) செர்வாண்டிஸ் (ஈ) தாந்தே

15) "கடைசி விருந்து" என்ற ஒப்பற்ற ஓவியத்தை வரைந்தவர்.

(அ) மைக்கேல் ஆஞ்சமோ **(ஆ) லியானர்டோ டாவின்சி** (இ) இரஃபேல் (ஈ) யூக்ளிட்

16) பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்பதை நிரூபித்தவர்.

**(அ) கோப்பர்னிகஸ்** (ஆ) கலிலியோ (இ) அரிஸ்டாட்டில் (ஈ) தாலமி

17) மார்ட்டின் லூதரை மதத்திலிருந்து நீக்கிய போப்பாண்டவர்.

(அ) எட்டாம் ஹென்றி **(ஆ) 10 வது லியோ** (இ) ஃப்ரடெரிக் (ஈ) உல்டிரிச் ஸ்விங்வி

18) மார்ட்டின் லூதர் விவிலியத்தை ______ மொழியில் மொழி பெயர்த்தார்.

(அ) ஆங்கிலம் **(ஆ) ஜெர்மன்** (இ) லத்தீன் (ஈ) கிரேக்கம்

19) இங்கிலாந்தில் தனியாக ஓர் ஆங்கிலிக்கன் திருச்சபையை நிறுவியவர்.

(அ) மார்ட்டின் லூதர் (ஆ) ஜான் கால்வின் (இ) இக்னேஷியஸ் மயாலோ **(ஈ) எட்டாம் ஹென்றி**

20) இளவரசர் ஹென்றி _____ நாட்டைச் சேர்ந்த கடலோடி ஆவார்.

(அ) ஸ்பெயின் **(ஆ) போர்ச்சுக்கல்** (இ) பிரான்ஸ் (ஈ) இங்கிலாந்து

21) பசிபிக் பெருங்கடல் என பெயர் சூட்டியவர் யார்?

**(அ) ஃபெர்டினாண்ட் மெகெல்லன்** (ஆ) பிலிப் (இ) சாமரின் (ஈ) வாஸ்கோடகாமா

22) யார் கண்டுபிடித்த பகுதிகளுக்கு போர்ச்சுகீசியர் உரிமை கொண்டாடினர்?

(அ) வாஸ்கோடகாமா (ஆ) இஸபெல்லா (இ) லோ போ கோன்ஸால்வ்ஸ் **(ஈ) கொலம்பஸ்**

23) கடவுளுக்கும் ஒரு தனிநபருக்குமிடையே திருச்சபை ஓர் இணைப்பு பாலம் என்பதை நிராகரித்தவர் யார்?

(அ) ஏராஸ்மசு (ஆ) தாலமி (இ) தாமஸ் **(ஈ) மார்ட்டின் லூதர்**

## <u>கோடிட்ட இடங்களை நிரப்புக</u> 27 x 1 = 27

24) கி.பி.1453 ல் கான்ஸ்டாண்டிநோபிளை ____ கைப்பற்றினர்

**உதுமானியத் துருக்கியர்**

25) ______ என்பவர் மனிதநேயவாதிகளிடையே ஒரு இளவரசர் என்று அறியப்படுகிறார்.

**எராஸ்மஸ்**

26) _____ சிஸ்டைன் திருச்சபை மேற்கூரைகளில் வரையப்பட்ட தன்னுடைய ஓவியங்களுக்காக புகழ்பெற்றவராவார்

**மைக்கேல் ஆஞ்சலோ**

27) கத்தோலிக்க திருச்சபை நிறுவனத்துக்கு உள்ளேயே மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தம் _____ ஆகும்.

**எதிர்மத சீர்திருத்தம்**

28) வணிகப்புரட்சியின் தலையாய அம்சங்கள் _______ , _______ மற்றும் ______ ஆகும்.

**வங்கிகள், கூட்டுப் பங்கு நிறுவனங்களின் தோற்றம் ,வர்த்தகத்தின் வளர்ச்சி**

29) மனிதநேயத்தைத் தன்னுடைய படைப்புகளில் முதலில் ஏற்று உள்வாங்கிக்கொண்டு, அது தொடர்பான சிந்தனைகளை வெளிப்படுத்தியவர்_______

**பெட்ராரக்**

30) மாக்கியவல்லி அரசியல் ஆய்வு ஒன்றை _______ என்ற தலைப்பில் எழுதினார்.

**இளவரசன்**

31) மைக்கேல் ஆஞ்சலோ உருவாக்கிய சலவைக்கல் சிற்பம்_______ .

**டேவிட் சிலை**

32) 'மடோன்னா' (கன்னிப்பெண்ணும் குழந்தையும்) என்ற அழகு நிறைந்த சித்திரத்தைத் தீட்டியவர்_____ .

**ரஃபேல்**

33) மத்திய காலகட்டத்தில் பூமியே பிரபஞ்சத்தின் மையம் என்ற கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தவர் _____ .

**அரிஸ்டாட்டில்**

34) இடைக்காலங்களில் _____ திருச்சபை ஒரு வலிமை நிறைந்த நிறுவனமாயிருந்தது

**ரோமன் கத்தோலிக்க**

35) திருச்சபையின் தலைவர்______

**போப்பாண்டவர்**

36) மத நீதிமன்றங்களிலேயே மிகவும் பழிக்கப்பட்டது______ மத நீதிமன்றமாகும்.

**ஸ்பானிய**

37) மார்ட்டின் லூதர் ______ பல்கலைக் கழகத்தில் இறையியல் ஆய்வுப் பேராசிரியராக இருந்தார்.

**விட்டன்பர்க்**

38) இயேசு சபையை நிறுவியவர்_____

**இக்னேஷியஸ் லயோலா**

39) கூட்டு வழிபாட்டின் முக்கியத்துவத்தையும், விழாக்களின் முக்கியத்துவத்தையும் மீண்டும் வலியுறுத்திய கவுன்சில்______ .

**ட்ரென்ட்**

40) கத்தோலிக்க திருச்சபைக்குள்ளேயே மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தம்_____ என்று அறியப்பட்டது.

**எதிர்மத சீர்திருத்தம்**

41) ஆப்பிரிக்காவின் தெற்கு முனைக்கு 'புயல்முனை' என பெயரிட்டவர்______ 'நன்னம்பிக்கை முனை' என பெயரிட்டவர்_____ .

**பார்த்தலோமியோ டயஸ், இரண்டாம் ஜான்**

42) கி.பி. (பொ.ஆ.பி) 1492இல் மூன்று கப்பல்களில் பயணத்தைத் தொடங்கியவர்_____

**கொலம்பஸ்**

43) போர்ச்சிக்கீசிய கடற்படையால் தோற்கடிக்கப்பட்ட கள்ளிக்கோட்டையின் அரசர்_______

**சாமரின்**

44) மெகெல்லன் நீரிணைப்பு கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு_____

**1519**

45) இந்தியாவில் ஏகபோக வர்த்தக ஆதிக்கத்தைக் கொண்டிருந்த கம்பெனி______ .

**ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி**

46) _______ என அழைக்கப்பட்ட விலங்கு தோலின் மீது கையினால் எழுதப்பட்ட எழுத்துப் பிரதிகளே பயன்பாட்டில் இருந்தன.

**வெல்லும்**

47) இத்தாலிய பல்கலைக்கழகங்களில் _____ படிப்புகள் மிகவும் புகழ்பெற்றதாய் விளங்கியது.

**கலை - அறிவியல் சார்**

48) பதினான்காம் நூற்றாண்டில் தாலமியின் ________ நூலின் ஒரு பிரதி பைஸாண்டின் பேரரசிலிருந்து மேற்குலகுக்குத் கொண்டு வரப்பட்டது.

**ஜியாகரபி**

49) மலபார் கள்ளிக்கோட்டியில் மிளகு மற்றும் பிற நறுமணப்பொருள்கள் குறைந்த விலையில் கிடைப்பதைக் கண்டு ______ திகைத்துப் போனார்.

**வாஸ்கோடகாமா**

50) அடிமைகளை அமெரிக்காவிற்கு விற்ற ஆப்ரிக்கா அதற்கு பதில் அமெரிக்காவிடமிருந்து ________ மற்றும் ______ பெற்றன.

**சர்க்கரை மற்றும் கச்சாப்பொருட்கள்**